பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 27 செவ்வாய்க்கிழமை 12.07.2022 கதிர் 139

## 38 கிலோ ஹெரோயினுடன் தாயும் மகனும் மாட்டினார்கள்

ஹெரோயின் போதைப்பொருளுடன் தாயும் மகனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றுபொலிஸ்ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

39 கிலோ ஹெரோயின் போதைப்பொருளுடன் 46 வயதுடைய தாயும் 22 வயதுடைய அவரது மகனுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிப்பகுதியிலுள்ளவீடொன்றில் போதைப்பொருள் மறைத்து 2

# வெளிநாட்டுக்குத் தப்பியோட முயற்சித்த பஸில் விமான நிலையத்தில் விரட்டியடிப்பு

## பிரபுக்களுக்கான பட்டுப்பாதை பயணிகள் அனுமதி முனையம் முடக்கம்





**வெளிநாடு செல்வற்காக விமான நிலையம் சென்ற முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடும் எதிர்ப்புக்கு மத்தியில் அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளார்.**

**இன்று அதிகாலை அவர், வெளிநாடு செல்வதற்காகக் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்றபோது அங்கிருந்த பெருந்திரளான பயணிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.** 2

## மஹிந்த, பஸில் கூட்டணியினர் வெளிநாடு செல்லத் தடையா?

### வியாழனன்று விசாரணைக்கு வருகின்றது மனு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால் மற்றும் டபிள்யூ.டி. லக்ஸ்மன் ஆகியோருக்கு உயர்நீதிமன்றின் அனுமதியின்றி நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தடுக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் 2

## நாளை பதவி துறக்கும் கடிதத்தில் இன்று கையெழுத்திட்டார் கோட்டா?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி விலகல் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் நாளை 13ஆம் திகதி பதவி விலகவுள்ளார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்திருந்தார்.



இதன்படி இன்று ஜனாதிபதி அதற்கான இராஜிநாமாக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளார் என்று 2

## ஜனாதிபதி பதவி விலகினால் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?

### சட்டமா அதிபருடன் பிரதமர் ஆலோசனை



ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்படின் மேற்கொள்ள வேண்டிய எதிர்காலச்செயற்பாடுகள் தொடர்பான சட்டமா அதிபரின் நிலைப்பாடு பிரதமரின் செயலாளருக்கு இன்று அனுப்பப்பட்டுளது.

குறித்த விடயம் தொடர்பில் பிரதமரின் செயலாளர் 2

## அலரி மாளிகையில் பொருள்கள் திருட்டு

### கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பிரதமரின் ஊடகப் பிரிவு முறைப்பாடு



அலரி மாளிகையின் ஊடகப் பிரிவில் இருந்த உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன என்று பிரதமர் ஊடகப் பிரிவு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

ஊடகப் பிரிவில் இருந்த இரண்டு மடிக்கணினிகள், வீடியோ கமரா மற்றும் ஏனைய கமரா 2

## அலரி மாளிகையில் மோதல்; 10 பேர் வைத்தியசாலையில்

அலரி மாளிகையில் இன்று அதிகாலை இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்த பெண்ணொருவர் உள்ளிட்ட 10 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களால் கடந்த சனிக்கிழமை இரவு அலரி மாளிகை கைப்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



## கோட்டாவின் நெருங்கிய சகாவான தென்மாகாண ஆளுநர் இராஜிநாமா

கொழும்பு, ஜூலை 13

தென்மாகாண ஆளுநர் பேராசிரியர் விலி கமகே இன்று ஆளுநர் பதவியில் இருந்து இராஜிநாமா செய்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்யத் தீர்மானித்ததையடுத்துத் தானும் ஆளுநர் பதவியிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார் என்றும் விலி கமகே குறிப்பிட்டுள்ளார்.

இவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நெருங்கிய சகா என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக பல்கலை மாணவர் போராட்டம்



(இ.கலையமுதன்)

கொழும்பில் அரச படைகளால் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் அதற்கு 2

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதி கோரும் வகையிலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் இன்று கவனயீர்ப்புப்போராட்டம்முன்னெடுக்கப் பட்டது.

இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பிரதான நுழை வாயிலுக்கு முன்பாக ஒன்றுகூடிய மாண வர்கள் வாயில் கறுப்புத்துணிகளைக் கட்டியவாறும் பதாகைகளைத் தாங்கிய வாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு முன்னால் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள், அரச படைகளால் தாக்கப்பட்டமையைக் கண்டித்தே இந்தப் போராட்டம் இடம்பெற் றது.

இதன்போது அடக்குமுறை வேண் டாம், அரசே பதில் கூறு, ஊடகவியலாளர் களுக்கு நீதி வேண்டும் போன்ற வாசகங் கள் அடங்கிய பதாகைகளை மாணவர் கள் தாங்கிப் பிடித்திருந்தனர்.

## மஹிந்த, பஸில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14ஆம் திகதி வியாழக்கிழமை விசார ணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மனு தாரர்கள் இன்று சட் டத்தரணி ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சட்டத்தரணி உபேந்ர குணசேகர வின் ஊடாக இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இந்தக் காரணங்கள் தொடர் பில் தற்போது அவசரமான நிலை காணப்படு வதால், எதிர் வரும் 14ஆம் திகதி இந்த மனுவைவிசாரணைக்குஎடுத்துக்கொள் ளுமாறும்மனுதாரர்கள்கோரியுள்ளனர்.

இந்த மனுவை கடந்த 6ஆம் திகதி ஆராய்ந்த நீதிமன்றம், ஜூலை 27ஆம் திகதி குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்குத் தீர்மானித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், இந்த வேளையில் இந்தத் தரப்பினர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றால் அது ஏற்றுக்கொள்ள முடியாத செயல் என்று மனுதாரர்கள் தெரிவித் துள்ளனர்.

இதன்படி, இந்த மனுவை இன்று பரி சீலித்த உயர்நீதிமன்றம், இந்த மனுவை எதிர்வரும் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

## ஜனாதிபதி பதவி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமன் ஏக்கநாயக்கவினால் சட்டமா அதி பரின் நிலைப்பாடு வினவப்பட்ட தன் அடிப்படையிலேயே இந்தப் பதில் அனுப் பப்பட்டுள்ளது.

எனினும், அதில் அடங்கியுள்ள தக வல்கள் வெளியாகவில்லை.

முன்னதாக ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ நாளை தமது பதவி விலகலை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தன தெரிவித்திருந்தார்.

## நாளை பதவி துறக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இதனைச் சபாநாயருக்கு அனுப்பி வைக்க வுள்ளார் எனவும், இதனைத் தொடர்ந்து சபாநாயகர் அதனை நாட்டு மக்களுக்கு அறிவிக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை, ஜனாதிபதி பதவி வில கியதும் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பை எதிர் வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடத்துவதற்குச் சபாநாயகர் தலைமை யில் நேற்று நடைபெற்ற கட்சித் தலை வர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

## அலரி மாளிகையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உபகரணங்கள் இவ்வாறு திருடப்பட்டுள் ளன என்று பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அலரி மாளிகைக்குள் பிரவேசித்ததன் பின் னரே இவ்வாறு உபகரணங்கள் காணா மல்போயுள்ளன என்றும் பிரதமரின் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதன் பின்னர் அலரி மாளி கையில் வசிக்கவில்லை எனவும், பிரத மரின் ஊடகப் பிரிவின் ஒரு பகுதியை மாத்திரம் அங்குள்ள கட்டடவளாகத்துக்கு மாற்றியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

## வெளிநாட்டுக்குத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, அவரின் ஆவணங்க ளைப் பரீட்சிப்பதற்கு குடிவரவுத்துறை அதிகாரிகள் மறுத்தனர். இதையடுத்து, அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன்போது குடிவரவு அதிகாரிகள், தமது கடமைகளைப் புறக்கணித்தமை யை அடுத்து, பஸில் ராஜபக்ஷ மீண்டும் நாட்டுக்குள் திரும்பிவிட்டார்.

இதேவேளை, இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் சங்கம், கட்டுநாயக்க விமான நிலையத்தில், பிர புக்களுக்கான பட்டுப்பாதை பயணிகள் அனுமதி முனையத்தில் இன்று காலை முதல் மறு அறிவித்தல் வரை பணிகளில் இருந்து விலகியுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் ஸ்திரமற்ற மற்றும் நெருக்கடி நிலை மற்றும் குற்றஞ் சாட்டப்பட்ட முன்னாள் அரசியல் பிரமுகர் கள் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இந்தப் பட்டுப்பாதை அனுமதி முனையத் தைப் பயன்படுத்தி நாட்டை விட்டு வெளி யேறுவதற்கான பலமான சாத்தியக்கூறு களைக் கருத்தில்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரி கள் சங்கத்தின் தலைவர் கே.ஏ.ஏ.எஸ். கனுகல தெரிவித்தார்.

இதையடுத்துப் பட்டுப்பாதை பயணி கள் அனுமதி முனையத்தின் செயற்பாடு கள் நிறுத்தப்பட்டன.

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்த முனையத்தின் ஊடாக வெளிநாடு செல்ல முயற்சித்த பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## 38 கிலோ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டிருக்கின்றது எனக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய முன்னெடுக் கப்பட்டசுற்றிவளைப்பின்போதேஹெரோ யினுடன் இருவரும் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை எம்பிலிப்பிட்டிப் பொலிஸார்முன்னெடுத்துவருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## படிக்க வேண்டியவை அதிகம்

மக்களினால் பதவியில் இருந்து துரத்தப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை நாளை ராஜினாமாச் செய்வார் எனக் கூறப்பட்டது. எனினும் அது இன்னமும் நிச்சயமாக இல்லை. அவர் ஏன் அதை இன்னமும் உடனடியாகச் செய்யாமல் இருக்கின்றார் என்பதற்கான காரணத்தை இன்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவர் சகோதரர் பஸில் ராஜபக்ஷவுக்கு நேர்ந்த அவலம் தெளிவுபடுத்தும்.

வி.ஐ.பிக்களுக்கு உரிய விசேட வாசல் வழியாக அமெரிக்காவுக்கு பயணிக்க வந்த பஸில் ராஜபக்ஷ தொடர்ந்து பயணம் செய்வதற்கு குடிவரவு குடியகல்வுப் பணியாளர்கள் அனுமதிக்கவில்லை.

பஸில் பயண ஏற்பாடுகளுடன் வந்தபோது விமான நிலையத்திலிருந்த பயணிகள் குழம்பினர். அவர்களின் சீற்றத்தைக் காரணம் காட்டி, குடியகல்வுப் பகுதி அதிகாரிகள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற விளக்கத்தை முன்வைத்து, பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதனால் பஸில் ராஜபக்ஷ தொடர்ந்து பயணிக்க முடியாது திரும்பி சென்றார்.

பஸில் ராஜபக்ஷ தற்போதைய ஜனாதிபதி கோட்டாபயவின் சொந்தத் தம்பி. இரு மாதங்களுக்கு முன்னர் வரை நாட்டின் நிதி அமைச்சர். கோட்டா ஆட்சிப் பீடத்தில் மிக வலிமையான சக்தி. ஆளும் பொதுஜன பெரமுனவின் ஆரம்ப காலத் தலைவர். ஸ்தாபகர். தேசிய அமைப்பாளர்.

அவரிடம் சட்டரீதியாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கான ஆவணங்கள் இருந்தன. அதற்கான முழு உரித்தும் அவருக்கு இருந்தது. ஆனால் தொடர்ந்து பயணிக்க முடியாது அவர் விமான நிலையத்திலிருந்து திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று.

அப்படி அவர் திருப்பி அனுப்பப்பட்டமை கூட சட்ட ரீதியாகச் சரியானது அல்ல. ஆனால் அதுதான் கள நிலைமை.

ஒரு காலத்தில் அதிகாரத்தில் சொகுசாக இருந்தபோது சட்டத்தைக் கையில் எடுத்துத் தாங்கள் பண்ணிய திருகுதாளங்களுக்குப் பிறிதொரு வழியில் இப்போது பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய சிக்கல்.

இனிமேல் ராஜபக்ஷக்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றால், படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை மீளத் திறந்து, அதன் மூலம்தான் சத்தம் சந்தடியின்றிப் பயணிக்க முடியும்; பயணிக்க வேண்டும்.

தாம் பதவியை விட்டு இறங்கினால் தமது கதியும் இதுதான் என்பது இப்போது கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் புரியத் தொடங்கியிருக்கும். ஆகவே தாம் பதவியில் இருந்தபடி, தங்கள் ராஜபக்ஷக்கள் தரப்பில் நாட்டை விட்டு வெளியேற வேண்டியவர்களை எல்லாம் ஏதேனும் வழி பண்ணி நாட்டை விட்டு அனுப்பி விட்டுத் தாமும் ஒரு வழியாக நாட்டை விட்டு கம்பி நீட்டிய பின்னர்தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி துறப்பது பற்றி சிந்திப்பார், நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

தாங்கள் பண்ணிய குடும்ப அரசியல் அட்டகாசம் இன்று தங்களை எந்த மட்டில் கொண்டு போய் நிறுத்தி இருக்கின்றது, நாட்டுக்குள் நகர முடியாத நிலைமை மட்டுமல்ல, நாட்டுக்கு வெளியே போகக்கூட இயலாத இக்கட்டில் வந்து சொருகிவிட்டு இருக்கின்றது என்பதை ராஜபக்ஷக்கள் இப்போது புரியத் தொடங்கி இருப்பார்கள்.

நம்பி வாக்களித்த மக்களை ஏமாற்ற முற்பட்டார்கள். இப்போது தங்களைத் தாங்களே ஏமாற்றி நிர்கதி நிலையில் நிற்கின்றார்கள் என்ற பேருண்மையைப் பாடமாக படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

2015இல் மக்கள் வாக்குச் சீட்டு மூலம் மக்கள் தண்டனை தந்தபோது, அதிலிருந்து பாடம் படித்துத் திருத்தாத பெரும் குற்றத்துக்காக – மீண்டும் மக்களை ஏமாற்றிய தவறுக்காக – இன்னும் பல பாடங்கள் ராஜபக்ஷகளுக்குக் காத்திருக்கின்றன.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல்கள் மீண்டும் அச்ச உணர்வை ஏற்படுத்துகிறது!

## யாழ்.ஊடக அமையம் கண்டனம்

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் மீண்டும் ஒரு முறை ஊடகவியலாளர்களது பாதுகாப்பு தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளதென யாழ்.ஊடக அமையம் தெரிவித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ்.ஊடக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

சக்தி–சிரச ஊடகவியலாளர்கள் மீதான இலங்கை அதிரடிப்படையின் தாக்குதல் அமைந்துள்ளது. ஊடகவியலாளர்களது பணிகளை முடக்கும் வகையிலான தாக்குதல்களை வன்மையாக கண்டிப்பதுடன் அதனுடன் தொடர்புடைய சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

உன்னதமான ஊடகப்பணி காரணமாக 41 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் 2000 ஆம் ஆண்டு முதல் காவு கொள்ளப்பட்டுள்ளனர். சிலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். சக்தி –சிரச ஊடக வலையமைப்பு உள்ளிட்ட பல ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டுமிருந்தன.

அரசமைப்பில் அறிவிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை சட்டங்களின்படி வன்முறைத் தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர்கள் அவர்களின் அடிப்படை உரிமை மீறல்களுக்கு ஆளாகியுள்ளனர். சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த 1994 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான சித்திரவதை அல்லது தண்டனைச் சட்டத்துக்கு எதிரான உடன்படிக்கையை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளதை யாழ்.ஊடக அமையம் சுட்டிக்காட்டவும் விரும்புகின்றது. தற்போதைய நெருக்கடி மிக்க கால எல்லையினுள் தலைநகர ஊடகவியலாளர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து தரப்பினையும் கோரி நிற்கின்ற யாழ்.ஊடக அமையம் இன,மத மொழி வேற்றுமை தாண்டி சக ஊடகவியலாளர்களது உரிமைக்கு கைகோர்த்து நிற்கும். – என்றுள்ளது.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டிக்கிறது

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகவியலாளர்கள் பொலிஸாரால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டமை கண்டிக்கத்தக்க செயற்பாடாகும். இந்த தாக்குதல் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கொழும்பில் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நேரடியாக செய்தி வழங்கிக்கொண்டிருந்த சிரச, சக்தி ஊடகவலையமைப்பின் ஊடகவியலாளர் கள் ஏழுபேர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதல் வன்மையாக கண்டிக்கத்தக்கது.

ஊடக நிறுவனத்தைக் குறிக்கும் வகையில். மேலாடையும் அடையாள அட்டைகளையும் தாங்கியிருந்த ஊடகவியலாளர்கள் மீது இத்தகைய மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளமை ஊடக சுதந்திரத்தை முற்றாக மழுங்கடிக்கும் செயற்பாடாகவே அமைந்திருக்கின்றது.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாரபட்சமற்ற உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டும்.

இத்தகைய தாக்குதல்கள் அண்மைக் காலமாகத் தொடர்ந்து வருகின்றன. படையினரும் பொலிஸாரும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் நன்கு அவதானம் செலுத்தி அவர்களது கடமைகளை தங்குதடையின்றி செய்வதற்கு வழிவகை செய்யவேண்டியது அவசியமாகும். – என்றுள்ளது.

# சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு பாதுகாப்பு கடுமையாக பலப்படுத்தப்பட்டுள்ளது!

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக்காக பொலிஸ் அதிரடிப் படையினருடன், மேலதிக குழுக்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகியதன் பின்னர் பதில் ஜனாதிபதியாக சபநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் அவரது உத்தியோகப்பூர்வ இல்லத்தின் மீதும் தாக்குதல் நடத்தப்படலாம் என்பதால் அவரது இல்லத்துக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு கொவிட் வைரஸ் தாக்கங்களே காரணம்

## சபாநாயகர் கூறுகிறார்



ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக பதவி விலகிய ஒரு வாரத்துக்குள் புதிய கட்சி கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்தனவெளிநாடுட்டு ஊடகத்துக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு கொரோனாவே பிரதான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்றுநோய் நாட்டில் பொருளாதார ரீதியாக பேரழிவை உருவாக்கியுள்ளது, என்றும் எங்கள் பணத்தை தடுப்பூசிகளுக்காக செலவிட வேண்டியிருந்தது எனவும் அவர் அந்த ஊடகத்துக்கு குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைன் போரில் ரஷ்யாவிற்கு ஈரான் ஆயுத உதவி வழங்குகிறதாம்





உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா அந்நாட்டின் பல நகரங்களை கைப்பற்றிய போது, உக்ரைன் ராணுவம் தொடர்ந்து ரஷ்ய படையை எதிர்த்து சண்டையிட்டு வருகிறது. இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆயுதம், நிதி மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றன.

இந்நிலையில் ரஷ்யாவுக்கு ஈரான் ஆயுத உதவி வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன், உக்ரைன் மீதான படையெடுப்பில் பயன்படுத்துவதற்கு ஆயுதம் தாங்கும் திறன் கொண்ட ட்ரோன்கள் உட்பட நூற்றுக்கணக்கான ஆளில்லா வான்வழி வாகனங்களை ரஷ்யாவிற்கு ஈரான் வழங்கி வருவதாக கூறினார்.

தங்களுக்கு கிடைத்த தகவலின்படி அவற்றை பயன்படுத்துவது குறித்து இந்த மாதத்தில் ரஷ்ய படைகளுக்கு பயிற்சி அளிக்கவும் ஈரான் தயாராகி வருகிறது என்றும் அவர் கூறினார். முன்னதாக சவுதி அரேபியாவைத் தாக்க ஏமனில் இருந்து செயல்படும் சவுதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் இதேபோன்ற ஆளில்லா வான்வழி வாகனங்களை வழங்கியதாக சல்லிவன் குறிப்பிட்டிருந்தார். அமெரிக்கா அதிபர் ஜோ பைடன் இஸ்ரேல் மற்றும் சவுதி அரேபியாவிற்கு பயணம் செய்ய திட்டமிட்டுள்ளார். ஈரான் அணுசக்தி திட்டம் குறித்து தமது சுற்றுப்பயணத்தின் போது பைடன் ஆலோசிக்க உள்ள நிலையில், ஈரான் குறித்த சல்லிவன் குற்றச்சாட்டு வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் அதிகரிக்கும் கொரோனா பிரபல சூதாட்ட விடுதிகள் மூடல்



கொரோனா வைரஸ் முதன் முதலில் சீனாவில் தான் கண்டறியப்பட்டதாக கூறப்படுகிறது. அதன்பிறகு பல நாடுகளுக்கும் தொற்று பரவிய நிலையில் பல நாடுகளும் பொதுமுடக்கத்தை அறிவித்தன. தற்போது தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டதன் காரணமாக தொற்று பரவல் கட்டுக்குள் உள்ளது. எனினும் உருமாறிய கொரோனா வைரஸால் தற்போது சில நாடுகளில் பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது. அந்தவகையில் சீனாவில் கடந்த சில மாதங்களாக கொரோனா பாதிப்பு மீண்டும் உயர்ந்து வருகிறது.

அந்தநாட்டின் முக்கிய நகரங்களான பெய்ஜிங், ஷாங்காய், ஜிலின் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உருமாறிய பிஏ.5 வகை தொற்று வேகமாக பரவி வருகிறது. இதனால் அங்கு கடந்த சில நாள்களாக பாதிப்பு 400ஐ தாண்டி பதிவாகி வரும் நிலையில், தெற்கு கடலோர பகுதியில் அமைந்துள்ள மக்காவ் பிராந்தியத்திலும் பாதிப்பு நாள்தோறும் அதிகரித்து வருகிறது. இந்த பிராந்தியத்தில் தான் உலகின் மிகப்பெரிய சூதாட்ட விடுதிகள் ஏராளமாக உள்ளன. இந்நிலையில் தொற்று பரவல் காரணமாக சுமார் 2 ஆண்டுகளுக்கு பிறகு மக்காவ் பிராந்தியத்தில் உள்ள அனைத்து சூதாட்ட விடுதிகளும் நேற்று மூடப்பட்டன. இதற்கிடையே பெய்ஜிங் நகரிலும் தொற்று பரவல் அதிகரித்து வருவதால் மீண்டும் பொதுமுடக்கம் அமுலாக்கப்படலாம் என பொதுமக்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது.



## பிரபஞ்சத்தின் ரகசியத்தை படம் பிடித்த ஜேம்ஸ்வெப் முதல் வண்ணப்படத்தை வெளியிட்டார் ஜோபைடன்

உலகை ஆராய்வதில் தொலைநோக்கிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. அந்த வகையில் அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான நாசா ஆய்வு மையம் விண்வெளியில் உள்ள இதுவரை அறிந்திராத அதிசயங்களை கண்டறியும் பணியில் உலக நாடுகளுடன் இணைந்து ஈடுபட்டு வருகிறது. இதன்படி ஐரோப்பா மற்றும் கனடாவில் விண்வெளி ஆய்வு அமைப்புகளுடன் இணைந்து 'ஜேம்ஸ் வெப்' என்ற விண்வெளி தொலைநோக்கியை நாசா உருவாக்கியது. சுமார் 80 ஆயிரம் கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இந்த தொலைநோக்கி, பிரெஞ்ச் கயானாவில் உள்ள ரொக்கெட் ஏவுதளத்தில் இருந்து 5 ரொக்கெட்டுகள் மூலம் கடந்த டிசெம்பர் மாதம் 25ம் திகதி வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

பூமியில் இருந்து 10 லட்சம் மைல்கள் தொலைவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள இந்த தொலைநோக்கி அங்கிருந்து பிரபஞ்சத்தை படம் பிடித்து அனுப்பி உள்ளது. இதன் முதலாவது வண்ணப்படத்தை அமெரிக்க அதிபர் ஜோபைடன் நேற்று இரவு வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் துணை அதிபர் கமலா ஹாரிஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மனித கண்களுக்கு புலன் ஆகாத பகுதிகளையும் கதிர்வீச்சு ஊடுருவல் முறையில் படம் பிடித்து அனுப்பி உள்ளது. இதன் மூலம், விண்வெளியில் ஆயிரக்கணக்கான பால்வெளி மண்டலங்கள் இருப்பது தெரியவந்துள்ளது. பூமியில் இருந்து 1,300 ஆண்டுகள் பயணம்செய்துஇந்தபடம்எடுக்கப்பட்டுள்ளதாக நாசாவின் நிர்வாகி பில்நெல்சன் கூறி உள்ளார். இதுதொடர்பாக நாசா வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'இன்று வரை பிரபஞ்சத்தின் ஆழமான மற்றும் கூர்மையான அகச்சிவப்பு காட்சி. அது நமக்கு கண்ணுக்கு தெரியாத விண்மீன் திறள்களை காட்டுகிறது. தொலை நோக்கி மூலம் எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பு ஜூலை 12ம் திகதி வெளியிடப்படும்' என கூறப்பட்டுள்ளது. நாசாவின் இந்த சாதனை படத்தை வெளியிட்ட ஜோபைடன், விஞ்ஞானிகளை வெகுவாக பாராட்டி உள்ளார்.



## புதிய பிரதமர் பதவிக்கு கடும் போட்டி ரிஷி சுனக்குக்கு அதிகரிக்கும் ஆதரவு

ஆளுங்கட்சியில் எழுந்த கடும் எதிர்ப்பு காரணமாக இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் பதவி விலகியதை தொடர்ந்து அந்நாட்டின் புதிய பிரதமரை தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகள் தொடங்கி உள்ளன. ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் தான் பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்படுவார் என்பதால் கட்சி தலைமைக்கு கடும் போட்டி வலுத்து வருகிறது.

இதில் போரிஸ் ஜான்சன் மந்திரி சபையில் நிதி மந்திரியாக இருந்தவரும், இந்திய வம்சாவளி எம்.பியுமான ரிஷி சுனக், இந்திய வம்சாவளியை சேர்ந்த சூவெல்லா பிரேவர்மன், பாகிஸ்தான் வம்சாவளியை சேர்ந்த சாவித் ஜாவித், ஈராக் வம்சாவளியை சேர்ந்த நாதிம் சாகவி உள்பட 10 பேர் போட்டியில் உள்ளனர்.

இவர்களில் இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார். இவர் இன்போசிஸ் இணை நிறுவனர் நாராயண மூர்த்தியின் மருமகன் ஆவார். ரிஷி சுனக் தனது பிரசாரத்தை தொடங்கி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் டுவிட்டர் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், நாம்அனைவரும்இணைந்துநம்பிக்கையை மீட்டெடுப்போம். பொருளாதாரத்தை மீண்டும் கட்டமைப்போம். நாட்டை ஒற்றுமைப்படுத்துவோம். இந்த தருணத்தில் சரியான முடிவுகள் எடுக்க வேண்டும் என கூறி உள்ளார்.

இந்த வீடியோ 3 நிமிடங்கள் வரை ஓடுகிறது. அதில் ரிஷி சுனக் தனது பெற்றோர், குடும்ப பாரம்பரியம் பற்றி கூறி உள்ளார். அதோடு தனது பெற்றோர் எப்படி போராடினார்கள்? அவர்களுக்கு பிரிட்டன் எப்படி சிறந்த எதிர்காலத்தை அளித்தது என்பது பற்றியும் ரிஷி சுனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கொரோனா காலத்தில் தான் மேற்கொண்ட பணிகள் பற்றியும் ரிஷி சுனக் பேசி உள்ளார். தற்போதைய தகவல்படி ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் மொத்தம் உள்ள 358 எம்.பிக்களில் 8 சதவீதம் பேர் ரிஷி சுனக்குக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதுதவிர பென்னி மார்டன்டுக்கு 6 சதவீத ஆதரவு உள்ளதாக கூறப்படுகிறது. சுகாதார மற்றும் சமூக நலக்குழு தலைவர் ஜெரிமி ஹன்டுக்கு 6 சதவீத ஆதரவும் உள்ளது. அதிக எம்.பிக்களின் ஆதரவு இருப்பதால் ரிஷி சுனக் பிரதமராக தேர்வாக அதிக வாய்ப்புகள் உள்ளன என கூறப்படுகிறது.

# அ.தி.மு.கவில் இருந்து பன்னீர்செல்வம் நீக்கம் பொதுக்குழுவில் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றம்

அ.தி.மு.கவில் ஒற்றைத் தலைமைக் கோரிக்கையை ஏற்க மறுத்த ஓ.பன்னீர் செல்வம், பொதுக்குழுவுக்குத் தடை கோரி தொடர்ந்து நீதிமன்றத்தை நாடியிருந்தார்.

ஆனால்,அவரதுமுயற்சிபலிக்கவில்லை. பொதுக்குழு நடத்த சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது. தனது கடைசி முயற்சியும் தோல்வியில் முடிந்த நிலையில், ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் கட்சித் தலைமை அலுவலகத்திற்குள் அதிரடியாக நுழைந்ததையடுத்து, ஓ.பி.எஸ். ஈ.பி.எஸ். ஆதரவாளர்களிடையே கடும் மோதல் வெடித்தது. இதில் பலர் காயமடைந்தனர். பொலிஸார் தடியடி நடத்தி கூட் டத்தை கலைத்தனர். மீண்டும் மோதல் ஏற்படாமல் இருக்க, அப்பகுதியில் ஏராளமானபொலிஸார்குவிக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்னராக, ஏற்கனவே அறிவித்தபடி அ.தி.மு.கவின் செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக இடைக்காலப் பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார். பொதுச்செயலாளர் பதவி உருவாக்கப்படும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொதுக்குழுவில் பேசிய தலைவர்கள் ஓ.பன்னீர்செல்வத்தை கடுமையாக தாக்கினர் என்றும், பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அப்போது குறுக் கிட்டு பேசிய கே.பி.முனுசாமி, பொதுக்குழு உறுப்பினர்களின் உணர்வுகளை மதிக்கும்வகையில்பன்னீர்செல்வம் விரை வில் கட்சியில் இருந்து நீக்கப்படுவார். உங்களின் கோரிக்கையை இடைக்காலப்பொதுச்செயலாளர் தீர்மானமாகக் கொண்டு வருவார், என்று கூறி னார் எனவும் செய்திகள் வெளியா கியிருந்தன.

இதையடுத்து, அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் ஓ.பி. எஸ். கலவரத்தை ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டி, ஓ.பன்னீர் செல்வத்தை கட்சியில் இருந்து நீக்குவது தொடர்பாக சிறப்பு தீர்மானம்கொண்டுவரப்பட்டுநிறைவேற்றப்பட்டுள்ளது. அதில், ஓ.பன்னீர் செல்வத்தின் செயல்பாடுகளுக்கு பொதுக்குழு கண்டனம் தெரிவிப்பதுடன், கட்சியின் கொள்கைக்கு எதிராக செயல்பட்டதால் அவர் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கப்படுகிறார் என கூறப்பட்டுள்ளது. அத்தோடு,



ஓ.பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்களான வைத்திலிங்கம், ஜே.சி.டி. பிரபாகர், மனோஜ் பாண்டியன் ஆகியோரும் கட்சியிலிருந்து நீக்கப்படுகிறார் என அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்க ப்பட்டுள்ளது.



## அ.தி.மு.கவின் இடைக்காலப் பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவு செய்யப்பட்டார்

அ.தி.மு.க. பொதுக்குழுவில் இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமியை தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொதுக்குழுத் தீர்மானத்தை முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் வாசித்தார்.

அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளருக்கான கட்சிச் சட்ட விதி 20ஐ மாற்றம் செய்து, ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளருக்குப் பதிலாக கழகப் பொதுச்செயலாளர் என்று விதி திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அ.தி.மு.கவில் இருந்து வந்த கழக ஆலோசனைக்குழு நீக்கம் செய்யப்பட்டு, அ.தி.மு.க. பொதுக்குழுவில் இடைக் காலப் பொதுச்செய லாளராக எடப்பாடி பழனிசாமியை தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 4 மாதங்களில் அ.தி.மு.க. பொதுச்செயலாளருக்கான தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த சிங்கிளாக இருக்க நாகாலாந்து அமைச்சர் கோரிக்கை



வடகிழக்கு இந்தியர்களின் கண்கள் குறித்துப் பேசி சமீபத்தில் இணையத்தில் பிரபலமானார் நாகாலாந்து அமைச்சர் டெம்ஜென் இம்னா அலோங். எங்கள் கண்கள் சிறிதாக இருப்பதால் நிகழ்ச்சிகளின்போது தூங்குவதற்கு வசதியாக இருக்கும், என டெம்ஜென்இம்னாதெரிவித்திருந்தார்.இதுசமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டு கிண்டலடிக்கப்பட்டது.

இந்த நிலையில் உலக மக்கள் தொகை தினம் கடைப்பிடிக்கப்பட்டதையொட்டி மக்கள் தொகைப் பெருக்கத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவதுஎனடெம்ஜென்இம்னாகருத்துத்தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், உலக மக்கள் தொகை தினத்தையொட்டி, மக்கள்தொகைப் பெருக்கத்தின் பிரச்சினைகளில் விழிப்புணர்வோடு இருப்போம் அல்லது என்னைப் போல் சிங்கிளாக இருங்கள். அப்போது நாம் ஒன்றாக ஒரு நிலையான எதிர்காலத்திற்கு பங்களிக்க முடியும். இன்றே சிங்கிள் இயக்கத்தில் சேருங்கள் என தெரிவித்துள்ளார். இந்தப் பதிவும் தற்போது பலராலும் பகிரப்பட்டுவருகிறது.



## இந்தியாவில் அதிக ஆண்டுகள் வாழ்ந்த புலி உயிரிழப்பு

இந்தியாவில் அதிக ஆண்டுகள் வாழ்ந்த ராஜா என்கிற புலி உயிரிழந்துள்ளது. மொத்தம் 25 ஆண்டுகள் 10 மாதங்கள், 18 நாள்கள் வாழ்ந்த அந்தப் புலி மேற்கு வங்கத்தில் உள்ள ஒரு மீட்பு மையத்தில் நேற்று அதிகாலை உயிரிழந்தது.

இந்தப் புலி ஓகஸ்ட் 2008 இல் வடக்கு வங்காளத்தில் உள்ள ஜல்தபாராவில் உள்ள கைராபரி சிறுத்தைப்புலி மீட்பு மையத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உலகின் மிகப்பெரிய சதுப்புநிலப் பகுதியில் சுந்தர்பன்ஸில் முதலை ஒன்று ராஜா புலியின் வலது பின்னங்காலை கடித்ததால் அது வடக்கு வங்கத்தில் உள்ள மீட்பு மையத்திற்கு கொண்டு வரப்பட்டது. மீட்பு மையத்திற்கு கொண்டு வரப்பட்ட போது அதற்கு 11 வயதாக இருந்தது. அதன் பிறகு அது மேலும் 15 ஆண்டுகள் அங்கு வாழ்ந்துள்ளது. உயிரிழந்த புலியின் உடலுக்கு வனத்துறை அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர்.

## அ.தி.மு.க. மோதலுக்கும் தி.மு.கவுக்கும் சம்பந்தமில்லை! தி.மு.க. அமைப்புச் செயலாளர் பாரதி தெரிவிப்பு



அ.தி.மு.க. மோதலுக்கும், தி.மு.கவுக்கு எந்தச் சம்பந்தமும் கிடையாது. யாருடைய அழிவிலும் தி.மு.க. இன்பம் காணாது. அ.தி.மு.க. பொதுக் குழு விவகாரத்தில் வீணாக தி.மு.கவை வம்புக்கு இழுக்க வேண்டாம், என்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்திருக்கிறார்.

அ.தி.மு.க. செய்த வன்முறையை பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டிய ஊடகங்களுக்கு தனிப்பட்ட முறையில் பாராட்டுக்கள். ஓ.பன்னீர்செல்வத்தின் பின்புலத்தில் தி.மு.க. இருப்பதாக எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாங்கள் யார் பக்கமும் செல்ல வேண்டிய அவசியமில்லை. எதற்கெடுத்தாலும் முதலமைச்சரையும், தி.மு.க.வையும் தாக்கிப் பேசுவது எடப்பாடி பழனிசாமிக்கு வாடிக்கையாகிவிட்டது. யார் மீதோ உள்ள கோபத்தை தி.மு.கவின் பக்கம் எடப்பாடி பழனிசாமி காட்டுகிறார். வருமானவரிச் சோதனையைக் கண்டிக்கத் தெம்பில்லாமல் தி.மு.க.வை குறை கூறுகிறார், என்றும் ஆர்.எஸ்.பாரதி குறிப்பிட்டிருக்கிறார்.



# முள்ளிப்பொத்தானை வடக்கில் மரவள்ளி, இராசவள்ளி நடுகை

(ஹஸ்பர்)

துரித பயிர்ச் செய்கை திட்டத்தின் கீழ் மர வள்ளி, இராசவள்ளி கிழங்கு நடும் நிகழ்வு முள் ளிப்பொத்தானை வடக்கு கிராம சேவகர் பிரிவில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையின் கீழ் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சபீரின் வீட்டுத் தோட்டத்தில் இச்செய்கைக்கான மரவள்ளி தடி நடும் நிகழ்வு இடம்பெற்றது.

நாட்டின்தற்போதையபொருளாதாரநெருக்கடிக்கு மத்தியில் உணவுப் பற்றாக்குறைக்கு முகங் கொடுக்கும் வகையில் இவ்வாறான திட்டம் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு மட்டம் என ஊக்கு விக்கப்பட்டு வருகிறது.

சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட பலரும் இச்செய்கையில் திறம்பட ஈடுபட்டு வருகிறார்கள்.

இதில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் சித்திக் மற்றும் கிராம அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருமலை உப்புவெளி விபத்தில் ஒருவர் சாவு ; ஒருவர் படுகாயம்!

திருகோணமலை உப்பு வெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கன்னியா பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார், மற்றுமொருவர் படுகாயம் அடைந்துள்ளார் என உப்பு வெளிப் பொலிஸார் தெரிவித் தனர்.

கன்னியா பகுதியில் இருந்து திருகோணமலை நோக்கி மோட் டார் சைக்கிளில் இருவர் வந்து கொண்டிருந்தபோது அது வேகக் கட்டுப்பாட்டை இழந்து போக்குடன் (மதகுடன்) மோதி யதில் இந்த விபத்து இடம்பெற் றுள்ளதாக ஆரம்ப கட்ட விசார ணையில் தெரிய வருகிறது.

அன்புவழிபுரம் பகுதியைச் சேர்ந்த தனியார் காப்புறுதி நிறுவனம்ஒன்றில்பணியாற்றிய திருநாவுக்கரசு சுசிகரன் (வயது-40) என்பவரே உயிரிழந்துள் ளார். அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த 33 வயது உடையவர் படுகாயமடைந் துள் ளார்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் நேற்று திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில்வைக்கப்பட்டிருந்தது.

காயமடைந்த நபர் தற்போது அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# காத்தான்குடியில் கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு – காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி, மாவிலங்கத்துறையில் நேற்றுக் காலை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாடு மேய்ப்பதற்காகச் சென்ற ஒருவர் வயல் காணியில் கைக்குண்டு கிடப்பதைக் கண்டுள்ளார்.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தி யமையையடுத்து, அந்த இடத்துக்கு சென்ற காத்தான்குடிப் பொலிஸார், கைக்குண்டை மீட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





# கதிர்காம பாத யாத்திரீகர்கள் காரைதீவில் நேற்று வரவேற்பு

(காரைதீவு நிருபர் சகா)

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து கடந்த மாதம் புறப்பட்ட யாழ் கதிர்காம பாத யாத்திரை குழுவினருக்கு நேற்று காரைதீவில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாதயாத்திரீகர்கள் கல்முனையில் இருந்து 57 ஆவது நாளில் காரைதீவை வந்தடைந்த போது அங்கு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கே.ஜெயசிறில் இனிப்பு வழங்கி அவர்களை வரவேற்றார்.

கடந்த 12 வருடங்களாக பாதயாத்திரைக்குத் தலைமை தாங்கி செல்லும் வேல்சாமி மகேஸ்வரன் அடியார்களுக்கு தீப ஆராதனை செய்து வரவேற்க யாத்திரை ஆலோசகர் வி.ரி.சகா தேவராஜா வரவேற்புரையை நிகழ்த்தினார்.

தொடர்ந்து, பாதயாத்திரை அடியார்கள் ஸ்ரீ கண்ணகை அம் மன் ஆலயத்திற்கு வந்தடைந்து விசேட பூஜையில் கலந்து கொண்டார்கள் . நேற்று காலை சித்தானைக்குட்டி மடாலயத் திற்கு அவர்கள் விஜயம் செய்தனர்.

இன்று செவ்வாய்க்கிழமை பாத யாத்திரீகர்கள் மடத்தடி மீனாட்சியம்மன் ஆலயத்தை தரிசிக்க இருந்தனர்.

# தனிமையில் இருந்தவர் சடலமாக மீட்பு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – மீராவோடை ஹமீட் சேர்மன் வீதியி லுள்ள வீடொன்றில் இருந்து நபரொருவர் நேற்று சடலமாக மீட்கப்பட் டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத்தினர் நேற்று வெளியூர் ஒன்றுக்குப் பயணம் சென்ற நிலையில், வீட்டில்தனிமையில் இருந்த 55 வயதுடைய நபர் ஒரு வரே இவ்வாறு வயர் ஒன் றினால் கழுத்தில் சுருக்கி டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோத னைக்காக வாழைச்சேனை ஆதாரவைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது, இச் சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை வாழைச்சேனை பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.



# 19 சைக்கிள்களைத் திருடிய பலே கில்லாடி சிக்கினார்!

மட்டக்களப்பு நகரில் 19 சைக்கிள்களைத் திரு டிய சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட – காத்தான்குடியைச் சேர்ந்த – ஒருவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நேற்றுத் திங்கட்கிழமை உத்தரவிட்டார். மட்டு. அரசடிப் பகுதியில் உள்ள தனியார் கம்பனி ஒன்றிற்கு முன்னால் நேற்று முன்தினம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளை ஒருவர் திருடும் போது அந்தத் தனியார் கம்பனி பணியாளர்கள் திருடனை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், இந்நபர் தினமும் காத்தான் குடியில் இருந்து பஸ்வண்டியில் பிரயாணித்து மட்டு நகருக்கு வந்து அங்கு வங்கிகள், தனியார் கம்பனிகள், சந்தை மற்றும் வர்த்தக நிலையங் களுக்குமுன்னால் வீதிகளில்நிறுத்திவைக்கப்பட்டி ருக்கும் சைக்கிள்களைத் திருடிக் கொண்டு சென்று அதனை காத்தான்குடி பிரதேசத்தில் 17 ஆயிரம் ரூபா தொடக்கம் 25 ஆயிரம் வரை விலையில் விற்பனை செய்துள்ளார் எனவும், சில சைக்கிள்களை கழற்றிப் பாகங்களாக விற்பனை செய்துள்ளார் எனவும், போதைவஸ்துக்கு அடிமையான நிலையில் அதற்கு பணத் தேவைக்காக சைக்கிள்களைத் திருடி விற்பனை செய்து வந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து திருடப்பட்டு விற்பனை செய் யப்பட்ட 19 சைக்கிள்களைபொலிஸார் மீட்டுள்ளமையுடன், அதில் 15 சைக்கிள்களை திருட்டு கொடுத்தவர்கள் அடையாளம் காட்டி யுமுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆஸ்திரேலியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டி இலங்கை கிரிக்கெட் அணிக்கு இன்னிங்ஸ் வெற்றி

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

காலி சர்வதேச மைதானத்தில் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பமான இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி, முதல் இன்னிங்ஸிற்காக 364 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஸ்டீவ் ஸ்மித் ஆட்ட மிழக்காது 145 ஓட்டங்களையும் லபுசேன் 104 ஓட்டங் களையும் பெற்றனர்.

இலங்கை அணியின் பிரபாத் ஜயசூரிய 6 விக்கெட்டுகளையும் ராஜித 2 விக்கெட்டுக்களையும் ரமேஷ் மெண்டிஸ் மற்றும் மகேஷ் தீக்ஷன ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, 554 ஓட்டங்களைச் சேர்த்தது. தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காது 206 ஓட்டங்களையும்திமுத்கருணாரத்ன86ஓட்டங்களையும் குசல் மெண்டிஸ் 85 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் மிட்செல் ஸ்டார்க் 4 விக்கெட்டுக்களையும் ஸ்வெப்சன் 3 விக்கெட்டுக் களையும் லயோன் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

190 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி, 151 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழக்க, இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. மார்னஸ் லபுசேன் 32 ஓட்டங்களையும்




உஸ்மான் க்வாஜா 29 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இலங்கை அணியின் பிரபாத் ஜயசூரிய 6 விக்கெட்டுக் களையும் மகேஷ் தீக்ஷன மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக தனது முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே 12 விக்கெட்டுக்களை வீழ்த்திய பிரபாத் ஜயசூரியவும் தொடரின் நாயகனாக தினேஷ் சந்திமாலும் தெரிவுசெய்யப்பட்டனர்.




## உலக சாதனையைத் தவறவிட்ட இந்திய அணித்தலைவர் ரோகித்

இங்கிலாந்துக்கு எதிராக அதன் சொந்த மண்ணில் இந்தி யா ரி-20 தொடரைக் கைப்பற்றியது. முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற இந்திய அணி மூன்றாவது போட்டியில் 17 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே தொடரைக் கைப்பற்றிய காரணத்தால் ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்குத் தேவையான வீரர்களைக் கண்டறியும் நோக்கில் சோதனை முயற்சியாக மூன்றாவது போட்டியில் புவனேஸ்வர் குமார், ஜஸ்பிரித் பும்ரா, ஹார்திக் பாண்ட்யா போன்ற முக்கிய வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டு இளம் பந்துவீச்சாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

முழுநேர இந்திய அணித்தலைவராகப் பொறுப்பேற்ற பின் ரி-20 கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக 14 வெற்றிகளைப் பதிவு செய்து உலக சாதனை படைத்த ரோகித் சர்மா ஒட்டுமொத்தமாக இறுதியாக வழிநடத்திய 19 போட்டிகளிலும் இந்திய அணிக்கு வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இறுதி ரி-20 போட்டியில் வெற்றி பெற்றிருந்தால் சர்வதேசகிரிக்கெட்டில்அதிக போட்டிகளில்தொடர்ச்சியாக வெற்றிகளைப் பதிவு செய்த அணித்தலைவர் என்ற ஆஸ்திரேலிய அணியின் ரிக்கி பொன்டிங்கினுடைய சாதனையை ரோகித் சமப்படுத்தியிருந்திருப்பார்.

அந்த வாய்ப்பை ரோகித் தவறவிட்டுள்ளார். இருப்பினும் தொடர்ச்சியாக அதிக வெற்றிகளைப் பதிவு செய்த ஆசிய அணித்தலைவர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

ரிக்கி பொன்டிங் 2008 இல் தொடர்ச்சியாக 20 போட்டிகளிலும், 2006 - 07 பருவ காலத்தில் 16 போட்டிகளில் தொடர்ச்சியாகவும் வென்ற அணித்தலைவர் என்ற பெருமையைத் தக்கவைத்திருக்கிறார்.

## ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் இந்தியா-இங்கிலாந்து இன்று மோதல்

ரோகித்சர்மா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து தொடர்களில் விளையாடி வருகிறது. இரு அணிகளும் மோதிய 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2-1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. முதல் ஆட்டத்தில் 50 ஓட்டங்களாலும், இரண்டாவதில் 49 ஓட்டங்களாலும் இந்தியா வென்றது. மூன்றாவது மற்றும் இறுதி ரி-20 போட்டியில் இங்கிலாந்து 17 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ரி-20 தொடரையடுத்து, இரு அணிகளும் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகின்றன. முதல் போட்டி இன்று ஓவல் மைதானத்தில் நடக்கிறது. இரண் டாவது, மூன்றாவது போட்டிகள் 14, 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

**அணி விவரங்கள் -**

இந்தியா: ரோகித்சர்மா (அணித்தலைவர்), ஷிகர் தவான், விராட் கோலி, இஷான் கிஷன், ரிஷப் பண்ட், ஸ்ரேயாஸ் அய்யர், ஜடேஜா, சூர்யகுமார் யாதவ், ஹர்த்திக் பாண்ட்யா, அக்சர் படேல், சகல், மொகமட் சமி, ஷர்துல் தாகூர், மொகமட் சிராஜ், பிரசித் கிருஷ்ணா, அர்ஷ் தீப்.

இங்கிலாந்து: ஜோஸ் பட்லர் (அணித் தலைவர்), ஜேசன் ரோய், ஜோரூட், பெயர் ஸ்டோ, லிவிங்ஸ்டன், பிலிப் சோல்ட், பென்ஸ்டோக்ஸ், டேவிட் வில்லி, மொய்ன் அலி, ஹரி புருக், சாம் கரன், கிரேக் ஓவர்டன், பிரைடன் கார்சே, பார்கின்சன், டொப்லே.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணி வெற்றிபெற்றது

இங்கிலாந்து - தென்னாபிரிக்க மக ளிர்அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இங்கிலாந்து அணியின் சிறப்பான பந்துவீச்சை எதிர் கொண்ட தென்னாபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 218 ஓட் டங்களை எடுத்தது. அதிகபட்சமாக ட்ரை யன் 88 ஓட்டங்களைப் பெற்றார். இங்கி லாந்து அணி தரப்பில் நடாலி ஸ்கிவர் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனையடுத்து 219 ஓட்டங்கள் என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி கள மிறங்கியது. தொடக்க வீராங்கனைகளாக டொமி பியூமண்ட்- லம்ப் ஜோடி களமிறங் கியது. ஒரு ஓட்டத்தை எடுத்த நிலையில் டொமி பியூமண்ட் அவுட் ஆனார். அடுத்து வந்த சோபியா டங்கிலி 22 ரன்கள் எடுத்து வெளியேறினார். லம்ப் - நடாலி ஸ்கிவர் ஜோடிநிதானமாகவிளையாடிஓட்டங்களைச் சேர்த்தனர். நடாலி ஸ்கிவர் 55 ஓட்டங்களை எடுத்திருந்தபோது விக்கெட்டை பறி கொடுத்தார்.

மறுபக்கம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தொடக்க வீராங்கனை லம்ப் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தைப் பதிவு செய்தார். அவர்102ஓட்டங்களைஎடுத்துஆட்டமிழக்க, இங்கிலாந்து மகளிர் அணி 32.1ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி பெற்றது.

3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான இரண்டா வது ஒருநாள் போட்டி வருகிற 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வண்ணை வீரமாகாளி அம்மன் தேர் இன்று சிறப்புற நடந்தது!




**யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா இன்று(செவ்வாய்க்கிழமை) காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. இதில் அதிகளவான பக்த அடியார்கள் பங்கேற்றிருந்தனர்.**

# நாணயநிதியத்துடனான பேச்சுகளை அரசியல் ஸ்திரமின்மை பாதிக்கலாம்

## தொடர்ந்தும் பதவியில் நீடிப்பேன் என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்



இலங்கையின் அரசியல் குழப்பநிலை சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுகளைப் பாதிக்கலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தான் பதவியில் தொடர்ந்தும் நீடிக்கப்போகிறேன் என ரொய்ட்டருக்கு தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர், நாட்டில் நீண்டகால அரசியல் ஸ்திரமின்மை நீடிப்பது சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்படுவதைப் பாதிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுகளை மேற்கொண்டுள்ள மத்திய வங்கி ஆளுநர், தசாப்தகாலத்தில் இல்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள 2 கோடியே 20 லட்சம் மக்கள் சனத்தொகையைக் கொண்ட நாட்டில் அரசியல் ஸ்திரதன்மை இல்லாவிட்டால் பதவியில் நீடிக்கமாட்டேன் என மே மாதம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13 ஆம் திகதி பதவி விலகத் திட்டமிட்டுள்ளார், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய அரசாங்கத்துக்கு வழிவிடுவதற்காகப் பதவி விலகத் தயார் என அறிவித்துள்ளார், எனினும் குறிப்பிட்ட திகதியை அவர் அறிவிக்கவில்லை.

சனிக்கிழமை அவர்களின் வீடுகளுக்குள் நுழைந்த ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் இருவரும் பதவி விலகும்வரை அங்கேயே இருக்கப்போகிறோம் என தெரிவித்துள்ளனர்.

இதுவரை நாங்கள் கண்ட முன்னேற்றத்துக்கு அரசியல் ஸ்திரமின்மை பாதிப்பை ஏற்படுத்தலாம் என ரொய்ட்டருக்கு வழங்கிய பேட்டியின் போது வீரசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சு தொடர்பில் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் வைத்து அவர் கருத்துத் தெரிவித்துக்கொண்டிருந்தவேளை ஆர்ப்பாட்டக்காரர்களின் கோஷங்களைத் தெளிவாக கேட்கமுடிந்தது.

சர்வதேச நாணயநிதியத்துடன் நாங்கள் பேச்சுகளை மேற்கொண்டுள்ள திட்டங்களிலும் பிரிட்ஜிங் பினான்ஸ் மற்றும் எரிபொருள் எரிவாயு போன்றவற்றின் தட்டுப்பாடுகளுக்குத் தீர்வைக் காண்பதிலும் முன்னேற்றத்தைக் காண்பதற்கு கூடிய விரைவில் ஸ்திரமான நிர்வாகமொன்று ஏற்படுவதை விரும்புகின்றேன் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் மத்தியவங்கியை வழிநடத்துவாரா என்ற கேள்விக்கு ஆறு வருடத்துக்கு நான் நியமிக்கப்பட்டதும் எனக்கான பொறுப்புகள் உள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ரிசேர்வ் வங்கியுடன் 10 லட்சம் டொலர் நாணய இடமாற்று பேச்சுகள் இடம்பெறுகின்றன ஜனவரியில் இந்தியாவிடமிருந்து இலங்கை 40 கோடி பெற்றுக்கொண்டது அதன் பின்னர் இரு கடனுதவிகளாக 100 கோடியே 50 லட்சம் டொலர்களை பெற்றது.

நாங்கள் மற்றுமொரு 100 கோடிக்கான கோரிக்கையை விடுத்துள்ளோம்என தெரிவித்துள்ள அவர் எரிபொருள் இறக்குமதிக்காக மேலதிகமாக 50 கோடி டொலர்களைப் பெறுவதற்கான பேச்சுகளை இந்தியாவுடன் ஆரம்பித்துள்ளோம் எனவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

தொழில்நுட்ப அளவில் நாங்கள் சர்வதேச நாணயநிதியத்துடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். ஆனால் கொள்கையளவில் ஸ்திரமான நிர்வாகத்திடமிருந்து அதிகளவு அர்ப்பணிப்பு அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பசளை!

## அரச அதிபரிடம் முறைப்பாடு



கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளிற்கு மட்டுப்படுத்தப்பட்ட பசளை கிடைத்துள்ளமை தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனிடம் விவசாயிகள் முறையிட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை இரணைமடு விவசாய சம்மேளத்தினர் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 40 அந்தர் உரம் மாத்திரமே கிடைத்துள்ளது. ஏனைய விவசாயிகள் உரம் இல்லாது தவிக்கின்றனர். இந்த நிலையில் அவர்களுக்கான உரத்தைப் பெற்றுக் கொடுக்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எரிபொருள் பிரச்சினை காரணமாக இந்த வருடம் விதைப்புக்கான காலம் பிந்தியது. இந்த நிலையில் தற்பொழுது பசளைக்காகக் காத்திருக்கும் விவசாய நிலங்களுக்கு உரத்தைப் பெற்று தருவதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

கமநல சேவைகள் திணைக்களத்தின் புள்ளி விவரத்துக்கு அமைவாகவே மாவட்டத்துக்கு இந்த உரம் கிடைத்துள்ளது. காலம் பிந்தி விதைத்தாலும் தற்பொழுது 50 நாள்களுக்கு குறைவான பயிராக காணப்படும் வயல் நிலங்கள் தொடர்பில் கமநல சேவைகள் திணைக்களம் ஊடாக புள்ளி விவரத்தை விரைந்து தாருங்கள்.

இந்த விடயம் தொடர்பில் அந்தந்த திணைக்கள அதிகாரிகளுக்கும் குறிப்பிட்டுள்ளேன். அவர்களுக்கான உரத்தை சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி பெற்று தருவதற்கு முயற்சி மேற்கொள்வேன் என இதன்போது விவசாயிகளிடம் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி விடயம் தொடர்பில் விவசாய அமைப்புக்கள், திணைக்களங்களுடனான சந்திப்பு ஒன்றை எதிர்வரும் வியாழக்கிழமை ஏற்பாடு செய்துள்ளேன். அதில் இந்த விடயம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து கொள்ளலாம் எனவும் அவர் விவசாயிகளுக்குத் தெரிவித்திருந்தார்.

# யாழ்.வெதுப்பக உற்பத்தியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள்

யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக் கொள்ள விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் சங்க தலைவர் மற்றும் பிரதிநிதிகள் யாழ்.மாவட்ட செயலகத்திடம் வெதுப்பக உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் எரிபொருளை பெற்றுக் கொள்வதில் இடர்பாடுகளை எதிர்கொண்டுள்ளனர் எனவும், தாம் எரிபொருளை பெற்றுக்கொள்ள ஏதுவாக நடவடிக்கைகளை எடுக்குமாறு முன்வைத்த கோரிக்கைக்கு தீர்வாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள விசேட ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

வெதுப்பக உற்பத்தியாளர்கள் தங்களது வெதுப்பக சங்கம் ஊடாக தொடர்பு கொண்டு உற்பத்தி விற்பனையை தடையின்றி மேற்கொள்ள மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.07.2022இல் வெளியிடப்பெற்றது.